திரு. ந. தருமலிங்கம்: சட்டசபைத் தலைவர் அவர்களே, தலைமைச் செயலகத் துறைகளைச் சீரமைப்பதால் தமிழக அரசுக்குத் தொகை அளவில் ஏதேனும் லாபம் கிடைக்குமா? அல்லது, வெறும் நிர்வாகச் சீரமைப்பு மட்டும்தான் ஏற்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: சர்க்காருடைய நிர்வாக இயந்திரத்தில் திருத்தங்கள் ஏற்படும்போது அதிலே பணம் மிச்சமாகுமா என்பதுபற்றி அப்போதுதான் தெரியவரும். பணத்தைப்பற்றிய கவலை கொள்ளாமல் வேலைமுறை சரியாக இருக்கிறதா என்பதை முதலில் பார்க்க வேண்டும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், இப்போது சீரமைப்பதற்கான உத்தேசம் இல்லையென்று சொன்னார்கள். இப்போதுள்ளது சரியாக இருக்காது என்பதுதானே சர்க்காருடைய உத்தேசம்?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: தரப்பட்ட பதிலில் இப்போது இல்லையென்பதிலிருந்தே தகுந்த நேரத்தில் அப்படிப்பட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பது யூகிக்கப்படும். மேலும் விரிவான முறையில் இதுபற்றி ஆலோசித்து கருத்துக்களைச் சொல்வதற்கு மத்திய அரசிலேயே சில குழுக்கள் வேலைகள் செய்துவருகின்றன. பின்னாலே இதுபற்றி யோசனை செய்யப்படலாம்.

* 411 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state the reasons for the separation of the Education Department from the Health Department and the appointment of a separate Secretary to Government for the Education Department?

THE HON. THIRU C. N. ANNADURAI : Even before the separation of these two departments there were two senior scale Indian Administrative Service Officers, namely, a Secretary and an Additional Secretary in the Education and Public Health Department, the latter primarily dealing with "PUBLIC HEALTH" and the former primarily dealing with "EDUCATION" but having overall charge of Public Health also. In view of the growing importance both in the spheres of Education and Public Health, the Government felt that each of the two subjects may be independent charge of a separate Secretary and hence, they have issued orders constituting a separate Education Department and a separate Public Health Department. The orders of separation do not involve the creation of any additional senior scale Indian Administrative Service post.

THIRU K. VINAYAKAM : Sir, while answering a previous question of the same nature, the Hon. Chief Minister was pleased to state that there was no proposal to reorganize the Secretariat departments. How does this answer now given, fit in with the answer given to the previous question? Is it not incompatible?

THE HON. THIRU C. N. ANNADURAI : Dispersal of power is not necessarily to be construed as reorganisation.

திரு. இராம. அரங்கண்ணல்: முன்பிருந்த அரசு கல்வித் துறைக்கு செலவு செய்ததைவிட இப்போதுள்ள அரசு அதிகமாகக் கல்விக்குச் செலவு செய்வதாலும், புதிய பள்ளிகள், கல்லூரிகள் இவற்றை நல்ல முறையில் நடத்த வேண்டுமென்ற எண்ணத்திலும் சீரமைப்பு ஏற்பட வேண்டுமென்று கருதிக் கொள்வதில் தவறு இல்லையென்று கருதலாமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: கனம் உறுப்பினர் அப்படிக் கருதிக்கொள்வதிலே தவறு இல்லை.

DR. H. V. HANDE : When were these two departments, Education and Public Health Departments, actually separated?

THE HON. THIRU C. N. ANNADURAI : We separated it now.

THIRU K. VINAYAKAM : Due to the separation of these departments and the appointment of new Secretaries to the respective departments, what is the financial implication involved in it? Do the Government incur more expenditure now than they have previously incurred?

THE HON. THIRU C. N. ANNADURAI : Fortunately the incurring of expenditure is not significant. As I have stated, no new additional Secretaries have been appointed.

Visit of the Prime Minister to Coimbatore

* 412 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any public meeting was arranged by the Collector of Coimbatore in January-February 1967, when the Prime Minister of India visited Coimbatore; and

(b) if so, the expenditure incurred by the Collector?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) ஆம்.

(இ) கோயம்புத்தூரில், இந்தியத் தலைமை அமைச்சர் உரை நிகழ்த்திய பொதுக்கூட்டத்திற்காக ரூ. 17,115·00 செலவு ஏற்பட்டது.

திரு. ஏ. எம். ராஜா : சட்டமன்றத் தலைவர் அவர்களே, தேர்தல் பிரசாரக் கூட்டம் ஏற்பாடு செய்ததால், அந்த அதிகாரி மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தமிழ்நாடு முழுவதிலும் பொதுக்கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. சென்னை, கோவை, உதகமண்டலம், மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் இந்தியப் பிரதமர் கலந்து கொண்ட கூட்டங்களுக்காக ஆன மொத்த செலவு 1,10,774 ரூபாய். அதிலே 17,115 ரூபாய் கோயம் புத்தூருக்குச் செலவானது. பிரதமர் அவர்கள் தேர்தல் நேரத்தில்